# IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE,

# FAST TRACK COURT, ARANI.

## S.C.No.163/2018

**Deposition of Witness for : P.W.20**

**Name :** திரு.மேகநாதன்

**Father's Name :**

**Village :**

**Taluk :**

**Caste :**

**Calling :**

**Religion :**

**Age :**

எதிரிகள் 1 முதல் 6 ஆஜர். மற்ற எதிரிகள் ஆஜரில்லை. மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.

**Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the day of 16.10.2023.**

முதல் விசாரணை -

நான் தற்போது அனக்காவூர் காவல்நிலையத்தில் முதல்நிலை காவலராக பணிபுரிந்து வருகிறேன். 2017ஆம் ஆண்டு தூசி காவல்நிலையத்தில் காவலராக பணியில் இருந்தபோது, குற்ற எண்.26/2017 பிரிவு 147,148,302 இதச வழக்கில் காவல் ஆய்வாளர் சாட்சிகளை விசாரணை செய்தபோது நான் மடிக்கணிணியில் பதிவு செய்தேன். அதை நான் பிரிண்ட் செய்துக்கொடுத்தேன். இதுசம்பந்தமாக காவல் ஆய்வாளர்

என்னை விசாரணை செய்தார்.

<u>எதிரிகள் தரப்பில் பொதுவான குறுக்கு விசாரணை</u>

என்னை காவல் ஆய்வாளர் விசாரணை செய்வதற்கு எத்தனை நாட்களுக்கு முன்பு சாட்சிகளை விசாரணை செய்ததை மடிக்கணினியில் பதிவு செய்தேன் என்றால் நான் 2016ல் இருந்தே காவல் ஆய்வாளர் சொல்வதை மடிக்கணினியில் பதிவு செய்வது என்னுடைய பணி. 20.1.2017 அன்று தான் மடிக்கணினியில் பதிவு செய்த விஷயம் நடந்தது என்றால் சரி தான்.

பதிவு செய்தது காலையா, மாலையா இரவா என்றால் சாட்சி காவல் ஆய்வாளர் கொடுக்கும்போதெல்லாம் பதிவு செய்வேன் என்று சாட்சியம் அளித்தபோது கற்றறிந்த எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் காலையா மாலையா என கேள்வி கேட்க சாட்சி காலை என்று பதில் அளித்தார்.

அவ்வாறு காவல் ஆய்வாளர் சொல்ல சொல்ல எத்தனை சாட்சிகளின் வாக்குமூலங்கள் என்னால் பதிவு செய்யப்பட்டது என்றால் 28 சாட்சிகள் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது. 28 சாட்சிகளின் வாக்குமூலம் எவ்வளவு மணி நேரத்திற்குள் பதிவு செய்தேன் என்றால் காவல் ஆய்வாளர் எப்போது எல்லாம் சொல்கிறாரோ அப்போது எல்லாம் பதிவு செய்வேன்.

காவல் ஆய்வாளர் என்னை எப்போதெல்லாம் சொல்கிறாரோ அப்போது எல்லாம் பணி செய்வேன் என்ற சங்கதியை இவ்வழக்கு சம்பந்தமாக வாக்குமூலம் கொடுத்தேனா என்றால் கொடுத்தேன். நான் என்னுடைய வாக்குமூலத்தில் மேற்கண்ட சங்கதியை சொல்லவில்லை என்றாலும், தற்போது இவ்வழக்கிற்காக அவ்வாறு சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான்

மடிக்கணிணியில் எங்கள் காவல்நிலையத்தில் வைத்து காவல் ஆய்வாளர் ஏற்கனவே குறித்து வைத்திருந்த குறிப்பின் அடிப்படையில் பதிவு செய்யப்பட்டதே தவிர, சாட்சிகளின் வாக்குமூலத்தின் போது பதிவு செய்யப்படவில்லை என்றால் சரியல்ல. 28 சாட்சிகளில் எத்தனை ஆண் சாட்சிகள், எத்தனை பெண் சாட்சிகள் என்று என்னால் சொல்ல முடியாது என்றால் சரி தான்.

Typed down to my dictation in my presence and hearing and under my personal direction and superintendence and interpreted to the witness in the presence of the accused and admitted by the witness to be correct.

Sd/-.K.Vijaya.
Additional Sessions Judge,
Arani.